Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 13 2023

திங்கட்கிழமை நவம்பர் 13, 2023 | ஒளி: 09 கதிர் 126 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## இன்று பட்ஜெட்

2024 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டு சட்டமூலம் (வரவு-செலவுத் திட்டம்) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், பாராளுமன்றத்தில் இன்று (13) நண்பகல் 12 மணிக்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியமைச்சர் என்ற வகையிலேயே வரவு-செலவுத்திட்டத்தை ஜனாதிபதி சமர்ப்பிக்கவுள்ளார்.

தொடர்ச்சி P2



## கீரி சம்பாவில் மா:.பியா

உள்ளூர் சந்தையில் தற்போது கீரி சம்பா அரிசிக்கு பற்றாக்குறை நிலவுவதானது, அரிசி மாஃபியாவால் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் போதியளவு கீரி சம்பா அரிசி இருப்பு உள்ளது. எனினும், சில அரிசி ஆலை உரிமையாளர்கள் கையிருப்பை மறைத்து சந்தைக்கு விநியோகிப்பதை குறைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

தொடர்ச்சி P2

“கொடுங்கோலனுக்கு எதிராக

# பிரியர்கள் ஒன்றுபடனும்”



சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் கிரிக்கெட் மீதான தடையை நீக்குவதற்கு பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் மீதான தடையை நீக்குவதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவையுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2



## றைகம தோட்டத்தில் தீபாவளி கொண்டாடினார் செந்தில் தொண்டமான்

களுத்துறை மாவட்டத்தில் உள்ள றைகம பெருந்தோட்ட மக்கள் மீது பெரும்பான்மையின இளைஞர்கள் இன ரீதியாக தொடர் தாக்குதல் நடத்தி வந்த நிலையில்,இவர்களின் இப்பிரச்சினை இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானின் தலையீட்டால் இப்பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வந்ததது.

தொடர்ச்சி P2


## கந்தளாயில் நில அதிர்வு

■ ஏ.எம்.கீத்

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை(12) மதியம் சிறிய அளவிலான நில அதிர்வு உணரப்பட்டதாக கந்தளாய் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்

கந்தளாய் குளத்திற்கு அருகேயுள்ள கோயில் கிராமம்,முள்ளிப்பொத்தானை அண்டிய பிரதேசங்களில் நில அதிர்வு உணரப்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில் நில அதிர்வு உணரப்பட்டபோதிலும் சேதங்கள் இல்லை என்று அப்பிரதேசவாசிகள் தெரிவித்தனர் என்றாலும் அப்பிரதேச மக்களிடையே அச்ச உணர்வு காணப்படுவது குறிப்பிடத்தக்கது




உலகவாழ் இந்து மக்கள் தீபாவளி திருநாளை வெகுவிமர்சையாக ஞாயிற்றுக்கிழமை (13) கொண்டாடினர். இந்து ஆலயங்களிலும் சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு பூஜை வழிபாட்டின் போது பிடிக்கப்பட்ட படம், ( ரொசேரியன் லெம்பட் )

## பாகிஸ்தான் மிளகாயில் விஷ ரசாயனம் உள்ளது



பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிளகாயில், விஷ ரசாயனமான அஃப்லாடாக்சின் (Aflatoxin) கலந்து உள்ளமையினால், அதை மீள் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “வரலாற்றில் மிகவும் சவாலான பட்ஜெட்”

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம், பாராளுமன்றத்தில் இன்று (13) பகல் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இந்நிலையில், இந்த பட்ஜெட் குறித்து கருத் துரைத்துள்ள பொருளாதார நிபுணர்கள், வரலாற்றில் மிகவும் சவாலான வரவு - செலவுத் திட்டமாகும் என்றனர்.

2024ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி, அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 3,860 பில்லியன் ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




## வழக்குகளில் தொடர்புடையவர் புழல் சிறையில் தடுத்து வைப்பு

■ ரொசேரியன் லெம்பட்

இலங்கையின் குற்ற வழக்குகளில் தொடர்புடைய நபர் அகதிகள் போர்வையில் தமிழகத்தில் பதுங்கி இருப்பதற்காக படகு மூலம் தனுஷ்கோடி வந்திறங்கிய நிலையில் கைது செய்த மரைன் பொலிஸார் அவரை சென்னை புழல் சிறையில் தடுத்து வைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## “கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு இல்லை”



இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழுவிற்கு விதிக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும், நீதிமன்றத் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்வதாகவும் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “துயிலுமில்லத்தில் இருந்து இராணுவத்தை வெளியேற்றவும்”

■ நிதர்ஷன் வினோத்

துயிலுமில்லத்தில் இருந்து இராணுவத்தை வெளியேற்ற மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் கோரியுள்ளார்.

தொடர்ச்சி P2

## மாலைதீவு பிரஜை கைது

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படும் ஓய்வறையில் 58 வயதான மாலைதீவு பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைத் துப்பாக்கி ஒன்றை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சனிக்கிழமை (11) இரவு அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

## சா/த பெறுபேறுகள் 2 வாரங்களில் வெளிவரும்



2022 ஆம் ஆண்டிற்கான சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதற்கான பணிகளை பரீட்சைகள் திணைக்களம் தற்போது முன்னெடுத்து வருகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# பொத்துவில் கனகர் கிராம மக்களுக்கு தீபாவளி பரிசு

### ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்

கடந்த33வருடங்களாக மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களில் முதற்கட்டமாக 73 பேருக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கிவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் குறித்த காணி அனுமதிப்பத்திரங்களை திருகோணமலை காணி ஆணையாளர் பணிமனையில் வைத்து வெள்ளிக்கிழமை (10) வழங்கி வைத்தார்.

ஆளுநர் செந்தில் தொண்டமான் அம்பாறை மாவட்டத்துக்கு ஜூலை 11ஆம் திகதி விஜயம் செய்த வேளை சர்ச்சைக்குரிய கனகர் கிராமத்திற்கும் விஜயம் செய்தார். அப்போது உறுதியளித்தபடி குறித்த காணி அனுமதிப்பத்திரங்களை அவர் வழங்கி வைத்தார்.

அந்த வைபவத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான தவராசா கலையரசன், எஸ்.எம். முஷாரப், கபில அத்துக்கோரல, பொத்துவில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் உள்ளிட்ட பிரமுகர்கள் சமுகமளித்திருந்தனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## கீரி சம்பாவில் மா:.பியா

முன்னதாக கீரி சம்பா அறுவடை குறைவாக காணப்பட்ட போதிலும் கடந்த பெரும்போகத்தில் கீரி சம்பா அறுவடை செய்யப்பட்டதன் காரணமாக நெல் மற்றும் அரிசி இருப்பு குறையவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அரிசியை பதுக்கிவைப்பவர்கள் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த போகத்தில் அதிகளவு கீரி சம்பா அரிசியை பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்குமாறும் விவசாய திணைக்களத்திற்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கீரி சம்பா அரிசிக்கு அரசாங்கம் கட்டுப்பட்டு விலையினை நிர்ணயித்த போதிலும், தற்போது கீரி சம்பா அரிசி 305 முதல் 310 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, பல வர்த்தகர்கள் இரகசியமான முறையில் அதிக விலைக்கு கீரி சம்பா விற்பனையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# பிரியர்கள் ஒன்றுபடனும்”



இலங்கை கிரிக்கெட் மிகவும் ஊழல் நிறைந்த நிறுவனம் என்பதை இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும்.

எனவே, இதனை தேசிய பிரச்சினையாக கருதி இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழலை இல்லாதொழிக்கும் நோக்கில் பாராளுமன்றத்தில் அனைத்து கட்சிகளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தீர்மானம் நிறைவேற்றியதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிடுகின்றார்.

இது அரசியல் தலையீடு அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை கிரிக்கெட் கவுன்ஸிலின் தலைவர் ஷம்மி டி சில்வாவின் வேண்டுகோளுக்கு இணங்க சர்வதேச கிரிக்கெட் பேரவை இலங்கைக்கு கிரிக்கெட் தடை விதித்ததாக கிரிக்இன்போ இணையத்தளம் உட்பட பல சர்வதேச ஊடகங்கள் தற்போது செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை கிரிக்கெட் இந்த நாட்டு மக்களின் பொதுச் சொத்தானதே தவிர அவரது தனிப்பட்ட சொத்து அல்ல. அவ்வாறு கோரிக்கை விடுத்திருந்தால் அது நாட்டிற்கு செய்யும் துரோகமாகும்.விஷயத்திற்கு பொறுப்பான அமைச்சர் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊழல் நிறைந்த நிர்வாகக் குழுவின் கொடுங்கோன்மைக்கு எதிராக அனைத்து கிரிக்கெட் பிரியர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் சுமார் பத்தாயிரம் பாடசாலைகளில் சிறுவர்கள் கிரிக்கெட்டில் ஈடுபட்டுள்ளனர். இந்த நாட்டில் கிரிக்கெட் உரிமையை மீளப் பெற வேண்டும் என்பதே அந்த சிறுவர்கள் மற்றும் ஒவ்வொரு குடிமகனின் நம்பிக்கை. அதற்காக அரசாங்கம் தொடர்ந்து செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



## இன்று பட்ஜெட்

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம், செவ்வாய்க்கிழமை (14) ஆரம்பமாகி, ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்த்து 21 நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறும்.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம், 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும்.

வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 13ஆம் திகதி புதன்கிழமை வரையிலும் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமைகளை தவிர்த்து 19 நாட்கள் தொடர்ச்சியாக விவாதம் நடைபெறும். டிசெம்பர் 13ஆம் திகதி மாலை 6 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும்.

## றைகம தோட்டத்தில் தீபாவளி கொண்டாடினார்...

இந்நிலையில், பெரும்பான்மை இனத்தவரின் அடாவடித்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலையில், றைகம தோட்டத்திற்கு தீபாவளி தினத்தன்று (12) விஜயம் செய்த செந்தில் தொண்டமான், கேக் வெட்டி, பாட்டசு கொளுத்தி றைகம தோட்ட மக்களுடன் இணைந்து தீபாவளியை சிறப்பாக கொண்டாடினார்.

மேலும் அம்மக்களுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு, செந்தில் தொண்டமான் உத்தரவிட்டார்.

தேர்தல் காலத்தில் மாத்திரம் அரசியல் தலைமைகள் எமது தோட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் நிலையில், எமக்கு ஒரு பிரச்சினை வந்தவுடன் எங்களுடன் இணைந்து அதற்கான தீர்வினை உடனடியாக பெற்று தந்தது இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் மாத்திரமே என்று அத்தோட்ட மக்கள் அவருக்கு நன்றி தெரிவித்தனர்.

## “வரலாற்றில் மிகவும் சவாலான பட்ஜெட்”

அத்துடன், 2023ஆம் ஆண்டு அரசாங்க ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி செலவினம் 3,657 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவு 203 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது என்றும் கூறினர்.

## சா/த பெறுபேறுகள் 2 வாரங்களில் வெளிவரும்

2023 ஆம் ஆண்டிற்கான சாதாரண தர பரீட்சை அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறவுள்ளது எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

## “கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு இல்லை”

இடைக்காலக் குழுவிற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கினால், எதிர்வரும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்குத் தேவையான ஆதரவை அர்ஜுன ரணதுங்கவுக்கு வழங்கப்படும்.

அத்துடன் சர்வதேச கிரிக்கெட் பேரவை முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க தயாராக இருப்பதாகவும், இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு இல்லை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு உரிய முடிவு கிடைக்காவிட்டால் சர்வதேச விளையாட்டு நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் ரொஷான் ரணசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

> **“சர்வதேச கிரிக்கெட் பேரவை முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க தயாராக இருப்பதாகவும், இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு இல்லை**

## “துயிலுமில்லத்தில் இருந்து இராணுவத்தை வெளியேற்றவும்”

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவீரர் துயிலுமில்லங்களில் அதன் வளாகத்துள் தங்குமிடங்கள் அமைத்து நிலை கொண்டுள்ள இராணுவத்தினரால் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் நினைவு தின நாட்களிலும் பொது நினைவேந்தல் தினத்திலும் தங்களின் கவலைகள் தீர நினைவு கொள்ள முடியாது துன்பப்படுகின்றனர்.

யுத்தம் முடிந்து 14 ஆண்டுகள் கடந்தும் நினைவேந்தலில் பூரண சுதந்திரம் கிடைக்காமல் பல்வேறு இராணுவ கெடுபிடிகளுக்குள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அவதியுறுகின்றனர். ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்திற்கு அமைவாக நினைவேந்தல் நிகழ்வை மேற்கொள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்கிருந்தாலும் பூரண சுதந்திரம் உண்டு என கூறுகின்ற போதும் இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் நினைவேந்தல்கள் செய்ய பல்வேறு வடிவங்களில் இராணுவமும் பொலிஸாரும் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் நினைவேந்தலை உரிய இடத்தில் தங்களது பிள்ளைகள் அல்லது உறவினர்களின் உடல்கள் விதைக்கப்பட்ட அல்லது புதைக்கப்பட்ட இடங்களில் அனுஷ்டிப்பதற்கு கோப்பாய் , கொடிகாமம் , எல்லங்குளம் போன்ற மாவீரர் துயிலுமில்லங்களில் தங்குமிடங்கள் அமைத்து இருக்கின்ற இராணுவத்தினரை வெளியேற்றி மக்களின் நினைவேந்தலுக்கு வழிவிட குழுவில் தீர்மானமாக எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.




## வழக்குகளில் தொடர்புடையவர் புழல் சிறையில் தடுத்து வைப்பு

தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரை பகுதியில் அந்நிய நபர்கள் நடமாட்டம் மற்றும் கடத்தல் தடுப்பு தொடர்பாக ரோந்து பணியில் ராமேஸ்வரம் மரைன் பொலிஸார், சனிக்கிழமை (11) காலை ஈடுபட்டு வந்தனர்.

அப்போது தனுஷ்கோடி கம்பிப்பாடு கடற்கரையில் மரைன் பொலிஸாரை கண்டதும் தப்பியோட முயன்ற இலங்கை நபர் ஒருவரை மடக்கிப் பிடித்து விசாரணை செய்த போது அவர் முன்னுக்கு பின் முரணாக தகவல் அளித்துள்ளார்.

இதனால் சந்தேகமடைந்த மரைன் பொலிஸார், மண்டபம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை செய்தபோது அவர் இலங்கை யாழ்ப்பாணம் மாவட்டம் ஊர்காவற்றுறை சேர்ந்த ஜெயராசா என தெரிய வந்தது.

இதையடுத்து அவரிடம் மத்திய மாநில உளவுத்துறை அதிகாரிகள் மற்றும் மரைன் பொலிஸார் ஜெயராசாவிடம் விசாரணை நடத்திய போது அவர் மீது இலங்கை சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையங்களில் திருட்டு மற்றும் பல குற்ற பின்னணி வழக்குகள் இருக்கின்றன.

இவரை இலங்கை பொலிஸார் கைது செய்து சிறை தண்டனை பெற்று சிறையில் அடைத்து விடுவார்கள் என்பதால் இலங்கையிலிருந்து தப்பித்து இரண்டு லட்ச ரூபாய் பணம் கொடுத்து படகு ஒன்றில் வெள்ளிக்கிழமை (10) மாலை சுமார் 4 மணியளவில் இலங்கை மன்னார் -பேசாலை கடற்கரையில் இருந்து சட்டவிரோதமாக தனுஷ்கோடி வந்துள்ளதாக விசாரணையில் ஜெயராசா தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக படகு மூலம் கடல் வழியாக இந்திய கடல் எல்லைக்குள் வந்தது தெரிய வந்ததால் அவர் மீது மண்டபம் மரைன் காவல் நிலைய பொலிஸார் கடவுச்சீட்டு இன்றி இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாக, வழக்கு பதிவு செய்து ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பின் அவரை சென்னை புழல் சிறையில் அடைப்பதற்கு பொலிஸார் அழைத்து சென்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி இலங்கையின் குற்றப் பின்னணி உள்ள நபர் ஒருவர் சட்டவிரோதமாக தமிழகத்திற்குள் ஊடுருவி அகதிகள் போர்வையில் தமிழக அகதிகள் முகாமில் பதுங்கி இருப்பதற்காக தனுஷ்கோடி வந்த நபர் கைது செய்யப்பட்ட சம்பவம் பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பாகிஸ்தான் மிளகாயில் விஷ ரசாயனம் உள்ளது

ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் 25 மிளகாய் கொள்கலன்களும் உள்ளடங்குவதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையைச் சேர்ந்த வர்த்தகர்கள் குழுவொன்று இந்த மிளகாயை இறக்குமதி செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, உணவின் தரம் தொடர்பான பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்கு சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

அந்த வகையில் 0112 112 718 என்ற எண்ணுக்கு அழைத்து தெரிவிக்க முடியும்.



### அஃப்லாடாக்சின் என்றால் என்ன?

அஃப்லாடாக்சின் தீங்கு விளைவிக்கும். மனித மற்றும் விலங்கு கல்லீரல் திசுக்களில் சேதப்படுத்தும் விளைவில் உள்ளது. கடுமையான சந்தர்ப்பங்களில், இது கல்லீரல் புற்றுநோய் அல்லது மரணத்தை கூட ஏற்படுத்தும். அஃப்லாடாக்சின் b1 அசுத்தமான உணவில் மிகவும் பொதுவாகவே இருக்கிறது., மேலும் அதன் நச்சுத்தன்மை புற்றுநோய்க்கு மிகவும் வலிமையானது.

# பொத்துவில் கனகர் கிராம மக்களுக்கு தீபாவளி பரிசு

பொத்துவில் கனகர் கிராம மக்களின் கடந்த 33 வருட கால போராட்டத்திற்கு முதல் கட்ட நிவாரணமாக இந்த காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இங்கு வாழ்ந்து வந்த மக்கள் 1985 க்கு பின்னர் யுத்தத்தில் இடம்பெயர்ந்தனர். அங்கு

வாழ்ந்த 226 பேரில் முதல் கட்டமாக 73 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படவிருக்கிறது.

இற்றைக்கு 61வருடங்களுக்கு முன்பு அங்கு வாழ்ந்துவந்த அந்த மக்கள் தமது காணிகளைக்கோரி கடந்த 33வருடங்களாக போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

1960களில் சுமார் 278குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. 1981களில் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் காலத்தில் முன்னாள் எம்.பி. அமரர் எம்.சி.கனகரெத்தினத்தின் முயற்சியால் வீடுகட்ட அரை ஏக்கர் நிலமும் பயிர்செய்ய 2ஏக்கர் நிலமும் தரப்பட்டு 30வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டன. அவர்கள் மகிழ்ச்சியாக சேனைப்பயிர்ச்செய்கையுடன் வாழ்ந்துவந்தனர்.

1990களில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அவர்களை கடந்த 32வருடங்களாக அங்கு வனபரிபாலன இலாகா குடியேற அனுமதிக்கவில்லை என்பது பிரதான குற்றசாட்டாகும்.

எது எப்படியிருந்தபோதிலும் அவர்கள் வாழ்ந்த பிரதேசம் இன்று மிகவும் பயங்கரமான சூரப்பற்றைகளினால் சூழ்ந்து காடுமண்டிக்காணப்படுகின்றது. அந்தக்காட்டினுள் பாழடைந்து இடிந்து தகர்ந்த நிலையில் அவர்களது 30வீடுகளும் காணப்படுகின்றன. கூடவே அவர்கள் பாவித்த மலசலகூடங்களும் தகர்ந்தநிலையில் காணப்படுகின்றன. அதாவது அந்த மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் நிறையவே உள்ளன.

இதுவரை பாராளுமன்ற உறுப்பினர் தொடக்கம் பல அரசியல்வாதிகள் சமுகசேவையாளர்கள் எனப்பலரும் வந்து கலந்துரையாடி பல உறுதிமொழிகளைம் அளித்துள்ளார்கள். வனத்துறை உயரதிகாரியும் பிரதேசசெயலாளரும் இக்காணியை மீளளிக்க உறுதி கூறியுள்ள நிலையிலும் போராட்டம் தொடர்ந்தது. அம் மக்களின் கோரிக்கை இன்று கட்டம் கட்டமாக நிறைவேறத் தொடங்கியிருப்பதை கண்டு மகிழ்ச்சியடையலாம்.

# தெமட்ட கொடவில் குண்டுத் தாக்குதல்

பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுமான தெமட்டகொட ருவானின் தெமட்டகொட வெலுவான பிரதேசத்தில் உள்ள வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெமட்டகொட பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் முன் வாயிலில் இரண்டு குண்டுகளும் தோட்டத்தில் ஒரு வெடிகுண்டும் வீசப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெமட்டகொட ருவன் புஸ்ஸ உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது,



# ஸ்ரீதாமோதர பூஜை

கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் ஸ்ரீதாமோதர பூஜையை முன்னிட்டு தினமும் மாலை பகவான் ஸ்ரீதாமோதரருக்கு நெய் விளக்கேற்றும் வைபவம் நடைபெற்று வருகிறது.

கடந்த ஒக்டோபர் 28ஆம் திகதி ஆரம்பமான இப் பூஜை வைபவம் நவம்பர் 26ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

பகவான் கிருஷ்ணா பிருந்தாவனத்தில் அவதரித்து புரிந்த லீலைகளில் ஒன்றாகவே இந்த தாமோதரர் என்னும் பெயரும் பார்க்கப்படுகிறது. அதாவது அவர் வெண்ணெய் திருடியதற்காக அன்னை யசோதா அவரை உரலில் கட்டியதால் அவருக்கு தாமோதரர் என்ற பெயர் வந்தது. தாம் என்றால் கயிறு, உதரா என்றால் வயிறு.

பகவான் கிருஷ்ணா தன் தூய பக்தையான அன்னை யசோதாவின் அன்புத் தண்டனைக்குள்ளான இந்த மாதத்தில் அவருக்கு நெய்விளக்கேற்றி வழிபடுவர்கள் பகவானுக்கு மிகவும் பிரியமானவர்கள் எனப்படுவதால் பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தந்து நெய்விளக்கேற்றி அவர் அருளைப்பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டு க்கொள்ளப்படுகின்றனர்.

# சுனாமி அனர்த்தம் குறித்து விழிப்புணர்வு

■ எம்.எஸ்.எம். ஹனீபா



அம்பாறை மாவட்டத்தில் கரையோர பிரதேச பாடசாலை களில் மாணவர்களுக்கு அனர்த்த அபாய குறைப்பு மற்றும் சுனாமி அனர்த்தம் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. எம். றியாஸ், ஞாயிற்றுக்கிழமை (12) தெரிவித்தார்.

பருவ கால பெயர்ச்சி மழை மற்றும் காலநிலை மாற்றத்தின் அடிப்படையில் இயற்கை அனர்த்தமானது சர்வ சாதாரணமாக உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வருவதாகவும், அதன் உயிரிழப்புகள் மற்றும் பொருளாதார இழப்புக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன.

இச் சூழ்நிலைகளை கருத்திற் கொண்டு மக்களை இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பதற்கான அனர்த்த அபாய குறைப்புத் திட்டங்கள் மற்றும் அனர்த்த தயார்படுத்தல்களுக்கமைய பாடசாலை மட்டங்களில் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்து இளைஞர்களை வலுப்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ செயற்த்திட்டங்களான அனர்த்த அபாயக் குறைப்பு, அனர்த்த தயார்படுத்தல் நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகளை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்த உள்ளது என்றார்.

127 மாணவர்களுக்கு கண் பரிசோதனை

# 15 பேருக்கு பார்வை குறைபாடு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட கல்லடி மற்றும் மஞ்சந்தொடுவாய் பிரதேசங்களிலுள்ள 6 பாடசாலைகளில் இரண்டாம் தரத்தில் கற்கும் 127 மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கண் பரிசோதனையின்போது 15 மாணவர்களின் கண் பார்வையில் குறைபாடு காணப்பட்டுள்ளதாக கண் பரிசோதனை முகாம் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



இலவச கண் பரிசோதனை நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையில் வெள்ளிக்கிழமை (10) நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை மற்றும் மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரியில் 1988 ஆம் ஆண்டு கல்விக் கற்று கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களினால் உருவாக்கப்பட்ட சிவானந்தா விவேகானந்தா மாணவ ஒன்றியம், கல்லடி பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி மற்றும் அதனுடன் சார்ந்த பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கையிலும் பங்களிப்பு செய்து வருகின்றது.

அந்த வகையில் 2015 ஆம் ஆண்டு முதல் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்குகளும், விஷேட கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் சிறிகரநாதன் தலைமையிலான வைத்திய குழுவினரினால் தரம் இரண்டு மாணவர்களுக்கான இலவச கண் பரிசோதனை சிகிச்சை முகாமை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் 2023ஆம் ஆண்டுக்கான, இலவச கண் பரிசோதனை முகாம் சிவானந்தா மற்றும் விவேகானந்தா மாணவ ஒன்றியத்தின் தலைவர் விஷேட கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் சிறிகரநாதன் தலைமையில் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையில் நடைபெற்றது .

கல்லடி பிரதேசத்திற்குட்பட்ட 06 பாடசாலைகளின் தரம் இரண்டு மாணவர்களுக்கான கண் பரிசோதனைகள் செய்யப்பட்டன, கண் பிரச்சினைகள் இனம் காணப்பட்ட மாணவர்களுக்கான மேலதிக சிகிச்சைக்கான பரிந்துரைகளும் வழங்கப்பட்டன.



# 30 ஆயிரம் பனம் விதைகள் நாட்டும் திட்டம் ஆரம்பம்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

சர்வதேச சுற்றுச் சூழல் கரிசனைக்கு அமைவாக தேசிய மர நடுகை தினத்தை அனுசரித்து பல்லுயிர்த்தன்மை பாதுகாப்பையும் சமூகப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் விதத்தில் கதிரவெளியில் 30 ஆயிரம் பனம் விதைகள் நடும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

புனர்நிர்மாணம் செய்யப்பட்டு சமீபத்தில் பிரதேச பொதுமக்களிடம் கையளிக்கப்பட்ட திக்கனைக்குளம் அமைந்துள்ள கல்லரிப்புக் கிராமத்தின் சூழலில் இந்த பனம் விதைகள் நாட்டும் திட்டம் வெள்ளிக்கிழமை (10) வாகரை பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் ஏ. சுதர்ஷன் தலைமையில் இடம்பெற்றது.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு அமைப்பு (வீ எபெக்ற்) கொகாகோலா பவுண்டேஷன், இளைஞர் அபிவிருத்தி அகம் ஆகியவை கூட்டிணைந்து இந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

நிகழ்வை ஆரம்பித்து வைத்து பிரதேச பொதுமக்கள் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் விவசாயிகள் ஆகியோர் முன்னிலையில் கருத்துத் தெரிவித்த இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் திலீப்குமார், பல்லுயிர்த் தன்மைப் பாதுகாப்பு, வனப்பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, சமூக பொருளாதாரப் பாதுகாப்பு



# கிழக்கு ஆளுநரால் கட்டிடம் திறந்துவைப்பு

■ எப்.முபாரக்

திருகோணமலை கந்தளாய் நகரில் புதிய சந்தை கட்டிடமொன்றை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரலவின் வேண்டுகோளுக்கிணங்க மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி விவாகார இராஜாங்க அமைச்சுவினால் இருபது மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட சந்தை கட்டிடமொன்றை ஞாயிற்றுக்கிழமை (12) பொது மக்களுக்காக திறந்துவைக்கப்பட்டது.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நுவான் கபில அத்து கோரல, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களும் இணைந்து கொண்டனர்.

இந்நிகழ்வு, கந்தளாய் பிரதேசசபை செயலாளர் தலைமையின் கீழ் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# ‘DJ night’ நிகழ்வில் நடந்தது என்ன?



■ நிதர்ஷன் வினோத்

எமது ஹோட்டலில் “DJ night” நிகழ்வு முடியும் வரை எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என்றும் நிகழ்வு முடிந்த பின் வந்திருந்தவர்கள் அமைதியாக வெளியேறிச் சென்றனர் என ரில்கோ ஹோட்டல் முகாமைத்துவம் விளக்கமளித்துள்ளது.

யாழ்.நகர் பகுதியில் அமைந்துள்ள ரில்கோ ஹோட்டலில் “DJ night” எனும் பெயரில் போதை விருந்து கொண்டாட்டம் இடம்பெற்றதுடன் அங்கு வந்த சிலர் மது போதை தலைக்கு ஏற, தாம் கொண்டு வந்திருந்த கஞ்சா , ஐஸ் போன்ற போதைப் பொருளையும் நுகர தொடங்கியதாக சில நாட்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், ரில்கோ கோட்டல் முகாமைத்துவ பணிப்பாளர், த.திலகராஜ், ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள விளக்க அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளக்க அறிக்கையில், 04.10.2023 நிகழ்வு தொடர்பாக மேற்படி விடயம் தொடர்பில் சில வாரங்களிற்கு முன்னர் ஐதுசன் மற்றும் சாலினி எனும் பெயர்களையுடைய இருவர் எம்மைத் தொடர்பு கொண்டு DJ Night நிகழ்வு ஒன்றை செய்வதற்கு எமது ரில்கோ கோட்டலில் இடம் வேண்டும் என்று கேட்டார்கள்.

நிகழ்நிலை கட்டண நுழைவுச்சீட்டு (Online) நிகழ்வு என்ற காரணத்தால் மேற்படி நிகழ்விற்கான அனுமதியை மாநகர சபையிடம் பெற்றுவருமாறு கேட்டுக்கொண்டோம். அதன்பிரகாரம்

அந்த அனுமதியை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். நிகழ்வு நடந்து முடியும் வரை மாநகர சபை பிரதிநிதிகள் மேற்படி நிகழ்வை அவதானித்துக் கொண்டிருந்தார்கள். யாழ்ப்பான பொலிஸ் தலைமையகத்திற்கு அறிவித்து ஹோட்டலுக்கு வெளியே 06 பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள்.

எமது ஹோட்டலில் 100, 140 பேர் வரை கொள்ளக்கூடிய மண்டபம் (Hall) வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எமது நிறுவனம் சார்பில் அனுமதிக்கப்பட்ட மதுபானம் மற்றும் சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்பட்டது. நிகழ்வு முடியும் வரை எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. நிகழ்வு முடிந்த பின் வந்திருந்தவர்கள் அமைதியாக வெளியேறிச் சென்றனர். உண்மையில் இந்நிகழ்வை ஒருங்கமைத்த இளம் ஒருங்கமைப்பாளர்கள் இந்நிகழ்வை திறம்பட நடாத்தினார்கள். அவர்கள் பாராட்டிற்குரியவர்கள்.

எமது ஈழநாட்டை மிகவும் நேசிக்கின்றேன். பிரித்தானியாவில் இருந்து போர் நடக்கும் போது இங்கு வந்து ரில்கோ ஹோட்டலை கட்டியுள்ளேன். நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பை வழங்கி உள்ளோம். எமது ஹோட்டலில் பல முக்கிய கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. நாட்டின் முக்கிய பிரமுகர்கள் தங்கி இருந்துள்ளார்கள். நாம் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம்,கூடைப்பந்தாட்டம் மற்றும் துடுப்பாட்டம் போன்ற பல்வேறு விளையாட்டுக்களிற்கும் குறுந்திரைப்பட தயாரிப்பு துறைகளின் முன்னேற்றத்திற்கு அனுசரணையாளராகவும் உறுதுணையாகவும் இருந்துள்ளோம். பாடசாலைகளிற்கும் கிராமங்களிற்கும் உதவிகள் செய்துள்ளோம்.

கடந்த 02 நாட்களாக சில ஊடகங்களில் உண்மைக்கு புறம்பானதும் முற்றிலும் நடைபெறாத சம்பவங்களையும் திரிபுபடுத்தி எழுதப்பட்டமை மன வேதனைக்குரியவை. எமது இளைஞர்கள் தான் எமது மண்ணின் எதிர்கால தலைவர்கள். அவர்களுக்கென்று ஒரு வாழ்க்கை முறை உண்டு. அவர்கள் மேல் குற்றங்களை சுமத்தாமல் எப்போதும் நம்பிக்கை வைக்க வேண்டும். எமது

வேறுபாடுகளை மறந்து எமது நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்தை நாமே ஒன்றாக நிர்ணயிக்க வேண்டும் என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ரயிலை தடுத்த மெத்தை

■ ரஸீன் ரஸ்மின்

சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் குரன - கட்டுநாயக்கவுக்கு இடைப்பட்ட பகுதியில் வைத்து சனிக்கிழமை (11) திடீரென நிறுத்தப்பட்டது.

படுக்கைக்கு பயன்படுத்தும் மெத்தை ஒன்று ரயில் சக்கரத்தில் சிக்கியமையால் குறித்த ரயில் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிக்கிய மெத்தை துண்டு துண்டுகளாகியதால், ரயிலின் வால்வு ஒன்று உடைந்து போனதாகவும் அதனால், ரயில் இஞ்சினுக்கு பாதிப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால் , சுமார் இரண்டு மணிநேரம் ரயில் போக்குவரத்து தாமதமானது என ரயில் பயணிகள் விசனம் தெரிவித்தனர்.



# மிரட்டல் விட்டவர் ஐஸூடன் கைது

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு கொலை மிரட்டல் விடுத்து கப்பம் பெற முயன்ற பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்படும் போது சந்தேக நபரிடம் 12 கிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த சஜித்

ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக தனது மயக்கும் பாடல்களால் நாட்டை வண்ணமயமாக்கிய பாடகி லதா வல்பொலவின் பிறந்தநாள், 11 ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, லதா வல்பொலவின் வீட்டுக்குச் சென்று தனது பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.




## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (1) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சமன்மல் லைஃப் ஸ்டைல் (பீவீட) எல்டீடி | பீ - வி 00284393
இல. 474, சமன்மல், டெங்கோல், மாத்தறை.

தினித்தி கிரியேஷன்ஸ் (பீவீட) எல்டீடி | பீ - வி 00287585
இல. 459/284, தலவதுகொட வீதி, மாதிவெல, கோட்டை

எஸ் ஆர் மேன்பவர் என்ட் கன்சல்டன்சி சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
பீ - வி 00266251
இல. 430/2/1, காலி வீதி, பாணதுரை.

**கம்பனியின் புதிய பெயர்**
எஸ் ஆர் மேன்பவர் ஏஜென்சி (பிரைவட்) லிமிட்டட்

டீ.என். விக்ரமரத்ன உகஸ்கருவோ (பீவீட) எல்டீடி | பீ - வி 00253385
இல. 38/A, பொல்வத்த வீதி, பண்ணிபிடிய.

**கம்பனியின் புதிய பெயர்**
டீ.என். விக்ரமரத்ன கிரெடிட் என்ட் இன்வெஸ்ட்மென்ட் (பீவீட) எல்டீடி

**பணிப்பாளர்கள்**

# வ(ரி)லியை மறைக்க கிரிக்கெட் பலிக்கடாவாகியது

இலங்கையைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் மத்தியில் கிரிக்கெட் விளையாட்டு என்பது வாழ்க்கையுடன் இரண்டறக்கலந்த அம்சமாகவே அமைந்துள்ளது. 1996 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை முதன் முறையாக சுவீகரித்து. இலங்கையின் அடையாளத்தை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு சென்றது. காலப்போக்கில் கிரிக்கெட் விளையாட்டில் இலங்கை அணி சோபிக்கத் தவறிய போதிலும், ரசிகர்கள் தொடர்ந்தும் ஆர்வத்தை கைவிட்டதாக தெரியவில்லை.

இலங்கை கிரிக்கெட்டை உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் நிர்வகிப்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை ஸ்தாபிக்கப்பட்டு, அதன் செயற்பாடுகளை நிர்வாகிகள் முன்னெடுத்து வந்திருந்தனர்.

தொடர்ச்சியாக பல சர்ச்சைகளுக்கு முகங்கொடுத்து வந்த இலங்கை கிரிக்கெட் அணி, 2023 ஆசிய கிண்ண போட்டிகளின் இறுதிப் போட்டியில் மோசமாக துடுப்பெடுத்தாடி தோல்வியடைந்ததன் பின்னர், உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்கு புறப்பட்டு செல்லும் வரையில் உத்தியோகபூர்வ இறுதி 15 பேர் கொண்ட அணிக் குழாத்தை அறிவிக்கும் செயற்பாடு தாமதிக்கப்பட்டிருந்தது.

உலகக் கிண்ணப்போட்டிகளில் பங்கேற்ற இலங்கை அணி சோபிக்கத் தவறிய நிலையில், இந்திய அணியுடன் மிகவும் மோசமாக தோல்வியடைந்தது. குறிப்பாக அணியின் துடுப்பாட்டம் பெயரளவில் பலமானதாக காணப்பட்ட போதிலும், களத்தில் பெரிதும் சோபிக்கவில்லை.

இந்நிலையில் கிரிக்கெட் நிர்வாக சபையில் ஊழல் நடைபெறுவதாக பகிரங்கமாக குற்றம்சாட்டிய விளையாட்டுத் துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க, கிரிக்கெட் சபையை கலைத்ததுடன், இடைக்கால நிர்வாக சபையையும் நியமித்திருந்தார்.

இந்த நியமனத்துக்கு எதிராக ஏற்கெனவே காணப்பட்ட நிர்வாக சபை நீதிமன்றை நாடி இடைக்கால தடை உத்தரவை பெற்றிருந்த நிலையில், இந்த நிலைமை மேலும் மோசமடைந்தது. அனைவரின் கவனத்தையும் ஈர்க்க ஆரம்பித்தது.

பாராளுமன்றத்தில் அந்தவிடயம் விவாதிக்கப்பட்டு, சகல தரப்பினரின் ஆதரவுடன் கிரிக்கெட் விளையாட்டு நிர்வாகம் தொடர்பில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டது.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமையை தடை செய்வதாக சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் அறிவித்தது.

பிரச்சனைகளை திசை திருப்புவதற்காக வாராந்தம் இலங்கையில் புதிய பேசு பொருட்களை சமூக வலைத்தளங்களினூடாக பரப்புவது புதிய விடயமல்ல. அதுபோலவே, வங்குரோத்தடைந்த நாடு எனும் வகையில், பாராளுமன்றத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் இன்று (13) சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதில் வரிக்கு மேல் வரி அதிகரிப்பு செய்யப்பட்டு, பொது மக்கள் மீதான சுமை மேலும் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், பொது மக்களின் கவனத்தை திசை திருப்பும் முயற்சியாகக்கூட இந்த கிரிக்கெட் சபை விவகாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கலாம் என்பது சில தினங்களில் தெரிய வந்துவிடும்.

எவ்வாறெனினும்வ, (ரி)லியை மறைக்க பலராலும் விரும்பப்படும் கிரிக்கெட் விளையாட்டு பலிக்கடா ஆக்கப்பட்டுவிட்டது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மரியாதைக்குரிய வார்த்தைகளைப் பேசுவதே, உயர் நாகரிகம் ஆகும். எனினும் சிலர் தங்களுடைய பேச்சில், 'நீ', 'உனக்கு' என, விழித்துப் பேசுவதுண்டு.

சில கிராமங்களில் மட்டுமல்ல, வீடுகளிலும் கூட, பெற்றோரையும் வயது முதிர்ந்தோரையும் ஏன் சகலரையும், கௌரவமாகப் பேசாமல் எடுத்தெறிந்து பேசுகிறார்கள். இதைக் கேட்கவே கஸ்டமாக இருக்கும்.

"நீங்கள்" எனப் பணிவுடன் சொன்னால் என்ன? மேலும், தன் முன்னே இருக்கும் மனிதர்களுடன், ஏகத்தாளமாக உரையாடுபவர்கள், ஆணவத்துடன் நட்புக் கொண்டவர்கள் என மற்றவர்கள் நினைப்பார்கள் என்பதைப் புரியாதவர்கள்.

வாழ்க்கையில் எந்த நிலையில் வாழ்பவர்களுடனும் பணிவுடன் பழகவேண்டும். சிலரது பேச்சுகள் பிள்ளைகளுக்கே பிடிக்காது. அவ்வளவு கொடூரமாக இருக்கும்.

பாமர மக்களின் உரைகள், அப்பாவித்தனமாக இருக்கும். கேட்கும்போதும் பழகும்போதும், குணத்தில் வஞ்சக எண்ணம் இல்லை என்பது புரியும். ஒருவரின் கஉரையாடலில் இருந்தே, ஒழுக்கத்தைக் காணலாம். அழகானதும் தெளவானதுமான வார்த்தைகள் அமிர்தம்.

– நன்றி –பருத்தியூர் பால. வயிரவநாதன்

# காலம், தேவை, பயன் அறிந்து செயப்படாத அரசியல்

**லக்ஸ்மன்**

தீபாவளி பண்டிகைக்கு மறுநாளான இன்றைய தினம் (நவம்பர் 13) நாட்டிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருக்கிறது. இது ஒருவகையில் அரசாங்கத்தின் முன்னுதாரணமான நடவடிக்கை. ஆனாலும் அது எப்படி நடைபெற்றது என்பது சற்று பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டியது. மலையகம், கிழக்கு, வடக்கு என ஒவ்வொரு மாகாணப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குவதாக மாகாண அரசுகள் அறிவிக்க, வேறு வழியில்லாமல் அரசாங்கம் அந்த விடுமுறையை பொதுவானதாக அறிவித்தது. ஏற்கெனவே இந்நாள் சரியாக கணக்கிலெடுக்கப்பட்டிருந்தால் இந்த விடுமுறையை முன்னரே வழங்கியிருக்க முடியும்.

நாட்டில் தமிழர்களின் விடயங்கள் கணக்கிலெடுக்கப்படாமையையே இது காட்டி இருக்கிறது. இப்படித்தான் மக்களுக்கும் நாட்டுக்கும் தேவையான விடயங்களை மறந்து காலத்திற்குத் தேவையற்ற விடயங்களுக்குள் அரசியல்வாதிகள் மூக்கையல்ல தலையை புகுத்தி வீணான பிரச்சினைகளை உறுவாக்கிவிடுகிறார்கள்.

கடந்த வாரம் உலகளவில் பலவாறாக விமர்சிக்கப்பட்டதுதான் இலங்கையின் கிரிக்கெட் அணி உலகக் கிண்ணப் போட்டியில் இறுதிச் சுற்றுக்களுக்குள் செல்லாமல் மிக மோசமான தோல்விகளைச் சந்தித்து நாடு திரும்பியது.

இந்த விடயத்துக்குள் அரசியல்வாதிகள் மூக்கை நுழைத்ததன் காரணமாக பெரும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் கிரிக்கெட் அணி தோல்விகளைச் சந்தித்தமையானது வழமையான அல்லது பெருந்தன்மையாக பார்க்கப்படுதல் வேண்டும். ஆனால் அது தவிர்க்கப்பட்டு, தோல்வி பெரிதுபடுத்தப்பட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் இலங்கை கிரிக்கெட்க்கு இடைக்கால சபையை நியமித்து பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றம் அக்குழுவுக்கு இடைக்காலத் தடைவிதித்து, அத்துடன் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டு என ஒன்றன் பின் ஒன்றாக எவ்வளவோ நடந்து முடிந்துவிட்டது. அதனால் பல பிரச்சினைகளும் உருவாகியிருக்கின்றன.

இது ஏன் என்ற கேள்வி பலரிடம் உருவாகத் தொடங்கியுமிருக்கிறது. விளையாட்டுத்துறை அமைச்சர் முந்திரியாய் முந்திக்கொண்டதற்கு அவர் தடைபோட்டதைத்தவிர. சற்று ஒதுங்கியிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை கிரிக்கெட் விடயத்திற்குள் இருந்து தப்பித்துக் கொண்டதாகவே சொல்லமுடியும்.

இவ்வாறான அரசியல் நுழைவுகள் காரணமாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இலங்கைக் கிரிக்கெட் கவுன்சிலின் உறுப்புரிமைக்கு இடைக்காலத் தடையை விதித்துள்ளது. ஏற்பட்டிருக்கும் பிரச்சினையைச் சீர்செய்வது யார் என்ற சிக்கல் இப்போது தோன்றிவிட்டது. இதற்கு முன்னர் உதைபந்தாட்ட சம்மேளனம், ரக்பி என இருக்கின்ற வேளையில் இதுவும் நடந்தேறியிருக்கிறது. இவ்வாறு சர்வதேச அளவில் நடைபெற்று வருகின்ற இலங்கையின் விளையாட்டுத் துறைக்கு எதிரான நடவடிக்கைகள் நாட்டின் அரசியல் ஸ்திரமற்ற தன்மையின்மையையே காட்டி நிற்கின்றது.

அந்தவகையில் சிறிலங்கா கிரிக்கெட் விவகாரத்தை நோக்கினால், அரசியலால் செய்து முடிக்கவேண்டிய விடயங்களை விட்டு அரசியல் பயன்படுத்தத் தேவையற்றவைகளுக்கு அதனைப் பயன்படுத்தி வாங்கிக் கட்டிக்கொள்ளுதல்தான் தற்போது நடைபெற்றிருக்கிறது.

நமது நாட்டில் அரசியலை நடத்துவதற்காக ஏதுமில்லை என்பதனால், கிடைப்பதைக் கொண்டு அரசியல் நடத்த முனையும் சிலரால் இந்த நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்ற வகையிலான குற்றச்சாட்டுக்கள் இப்போது வலுத்து வருகின்றன. அந்த வகையில்தான் காலம், தேவை, பயன் அறிந்து செயப்படா அரசியலால் பயன் ஏதும் உண்டோ என்று எண்ணத் தோன்றுகிறது.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் நாட்டின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்ற நிலை மாறிப்போயிருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் குற்றஞ்சாட்டுவதும் எதிர்ப்புகளை வெளிப்படுத்துவதும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்த நிலை முன்னேற்றகரமானதாகக் கொள்ளப்படாது. இதிலிருந்து சிறந்த சிந்தனையுள்ள அரசியல்வாதிகளின் தேவை உணரப்படுகிறது.

காலத்தின் முன்னே பயிர் செய்கின்ற, எதிர்காலம் அறிந்து, உணர்ந்து அதற்காக பணியாற்றுகின்ற அறிவுஜீவிகள் அரசியல்வாதிகளாக உருவாக்கப்படவேண்டும். ஆனால், அவ்வாறான அரசியல்வாதிகள் நமது நாட்டில் இருக்கிறார்களா என்ற கேள்வியைத்தான் நாம் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

மக்களால் அதற்கான வழிகள் உருவாக்கப்படவேண்டும். அது காலம் காலமாக நடத்தப்படவில்லை. அந்த அறிவு மக்களிடம் இல்லையானால் அதற்கான அறிவை வழங்குவதற்கான செயற்றிட்டங்களை சரியானமுறையில் அரசோ, அரசு சாரா தரப்பினரோ மேற்கொள்ளவேண்டும். அதனை யார் மேற்கொள்வது என்ற முடிவில்லாமலே காலம் கடந்து கொண்டிருக்கிறது.

தேர்தல்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் அரசியலால் ஏதும் பயன் விளையாது என்பது எத்தனை அரசியல்வாதிகளால் உணரப்பட்டிருக்கிறதோ என்று மக்கள் அச்சப்படும் நிலை தோன்றிவிட்டது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும், மோசமான நிலைமைகளுக்கும் கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் எடுத்த தவறான, தூரநோக்கற்ற முடிவுகளே காரணமாகும். அதற்கு நல்லதோர் உதாரணம்தான் பதவிகளை விட்டும், நாட்டைவிட்டும் ஓடவேண்டிய நிலையை எதிர்கொண்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ அறிவித்த இயற்கை விவசாய முறையாகும். உண்மையில் அத்திட்டம் நாட்டுக்கும் உலகுக்கும் தேவையானது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு காலத்தை உணராது திடீரென எடுத்த முடிவு, அவரை மிக மோசமான எதிர்ப்பைச் சந்திக்கவேண்டியவராக ஆக்கிவிட்டது. அதனால் விளைந்தது பதவி துறப்புடன் அவமானமுமாகும்.

அது போலவே இதுவரை தீர்க்கப்படாத இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கும் இவ்வாறான நாட்டின் எதிர்காலம் குறித்த தூரநோக்கற்ற சிந்தனைகளும் மக்கள் நலனில் அக்கறையின்மையும் எனப் பல விடயங்களே காரணமாகும். சரியான அரசியல்வாதிகள் இன்மையும், திறமையற்ற தீர்க்கமாக செயற்பட முடியாத எதிர்க்கட்சிகளும் இதில் முக்கிய பங்கை வகிக்கின்றன.

இதனை தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாத இயலாமையின் வெளிப்பாடு என்றே சொல்லவேண்டும்.

1948இல் நாடு ஆங்கிலேயரியமிருந்து சுதந்திரமடைந்தது முதல் இன்றுவரையில் சரியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தால், அண்டைய நாடும், மேற்கு நாடுகளும் இங்கு முட்டு கொடுக்கவேண்டிய நிலை உருவாகியிருக்காது என்பது வெளிப்படையானது.

ஈழத் தமிழர்களது இனப்பிரச்சினை விடயம் முழுப் பூசணியை சோற்றில் புதைப்பது போலவும், பூனை கண்ணை மூடிக்கொண்டு நான் ஒன்றையும் காணவில்லை என்பதற்கும் ஒப்பானதாகவே இருந்து வருகிறது.

அவசர அவசரமாக சிறிலங்கா கிரிக்கெட் விவகாரத்துக்கு முழு பாராளுமன்றமும் அல்லோல கல்லோலமாகி, ஏகோபித்த முடிவுக்கு வந்து வாக்கெடுப்பு தேவையற்றதாகிப்போன போதும் சபாநாயகரிடம் வாக்கெடுப்பு கோரும் கட்சிகள் ஏன் தமிழர்களின் புரையோடிப்போன நீண்டகாலப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைக்க முடியாது என்ற கேள்வி இந்த இடத்தில்தான் தோன்றுகிறது.

ஒவ்வொரு ஜனாதிபதியையும், ஒவ்வோர் அரசாங்கத்தையும், ஒவ்வொரு கட்சியையும், அவர்களுடைய நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் குற்றஞ்சாட்டியபடியே நாடு இத்தனை தசாப்தங்களையும் கடந்து வந்திருக்கிறது. கடந்து வந்த பாதையின் படிப்பினைகளை நாட்டின் அரசியல் கட்சிகளோ, அரசில்வாதிகளோ இன்னமும் உணரவில்லை. நாட்டில் இல்லாத ஒரு பிரச்சினை எப்படி சாத்வீகம், அஹிம்சை, ஆயுதம், இராஜதந்திரம் என்று தமிழர் தரப்பு பயணித்தது என்ற கேள்வியை யாரும் தம்மிடம் கேட்பதாகத் தெரியவில்லை.

இருந்தாலும் நாட்டிற்குத் தேவையானதென்று தாங்கள் நினைக்கின்ற விடயங்களுக்கு தமிழர்களைப் பயன்படுத்தியதுதான் வரலாறாக இருந்திருக்கிறது. உதாரணமாக பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்ட தந்திரத்தையும், தமிழர்களைப் பிரித்தாளும் தந்திரத்தினையும் சுட்டிக்காட்டமுடியும்.

"தானறியா சிங்களம் தலைக்குச் சேதம்" என்பது போன்று தமிழ் மக்களது விவகாரத்தில் தன் நாட்டு மக்கள் மீதே பெரும் போர் தொடுத்து தாம் வெற்றி பெற்றதாக அறிவித்து இன்னமும் அம் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்குத் தயக்கம் காட்டி வரும் சிங்களப் பேரினவாதம் எதனை அடைந்து கொள்ளப் போகிறது என்பதை யாரும் தீர்மானிக்க முடியாது.

அந்தவகையில்தான், காலம் அறிந்து, மக்களின் தேவை, எதிர்பார்ப்பு, அதனால் ஏற்படும் பயன் அறிந்து செயப்படுகின்ற அரசியலை நம் நாட்டு அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிலைப்பாடு தொக்கி நிற்கிறது.

## கடிதங்கள்

### 3 காட்டு யானைகள் அட்டகாசம்

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேராறு பகுதியில் இரவு நேரங்களில் மூன்று காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும்,இரவு நேரங்களில் அச்சமாக இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த காட்டு யானை வான்எல காட்டுப்பகுதியிலிருந்து வயல்வெளி ஊடாக கந்தளாய் பேராறு பகுதிக்கு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பேராறு, மதுரசா நகர், மூன்றாம் கொலனி, உள்ளிட்ட கிராமங்களில் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றனர். குறித்த பகுதிகளில் தென்னை, வாழை, மாமரம் மற்றும் வீட்டுத் தோட்ட செய்கைகள் என்பனவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில் குறித்த கிராமங்களில் காட்டு யானைகள் பயிர்களை நாசம் செய்வதாகவும் தெரிவிக்கின்றனர்

கந்தளாய் வனவிலங்கு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இது வரைக்கும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ள வில்லையெனவும் மக்கள் குற்றம்சாற்றுகின்றனர். எனவே தமது கிராமங்களுக்கு சூழ பாதுகாப்பு வேலிகளை அமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– எப்.முபாரக்







ICC தலைமைத்துவத்துக்கு தெரிவான

# முதலாவது பெண்ணான மாரியா பெர்ணான்டா கார்ஸாவை வரவேற்ற கொமர்ஷல் வங்கி

சர்வதேச வர்த்தக சபையின் (ICC) தலைமைப் பதவிக்குத் தெரிவான முதலாவது பெண்ணான மாரியா பெர்ணான்டா கார்ஸாவை அண்மையில் கூட்டாண்மை நிகழ்வொன்றில் கொமர்ஷல் வங்கி வரவேற்றது. வங்கியின் முகாமைத்துவ பிரதிநிதிகள் உட்பட அழைக்கப்பட்ட விருந்தினர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். சினமண்ட் கிராண்ட் ஹோட்டலில் இந்நிகழ்வு இடம்பெற்றது. பரஸ்பர நலன்கள் தொடர்பான விடயங்கள் முதல் சர்வதேச வர்த்தக மற்றும் வியாபார விடயங்கள் பற்றி இந்நிகழ்வின் போது விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

சர்வதேச வர்த்தக சபையின் தலைவியை வரவேற்ற கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க தனது உரையில் ஒரு வர்த்தக வங்கியாக கொமர்ஷல் வங்கி கொண்டுள்ள நீண்ட கீர்த்திமிக்க வரலாறு பற்றி விளக்கிக் கூறினார். நாட்டின் மிகப் பெரிய தனியார் வங்கியாக அது அடைந்துள்ள வளர்ச்சி, வங்கியின் கடல் கடந்த செயற்பாடுகளில் அது கண்டுள்ள அபிவிருத்தி, நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு வங்கியாக நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு அதன் பங்களிப்பு, கடந்த காலங்களில் வங்கி அறிமுகம் செய்துள்ள முன்னோடி புத்தாக்க கண்டு பிடிப்புக்கள், வங்கி பெற்றுள்ள விரிவான சர்வதேச அங்கீகாரம், வங்கியின்; டிஜிட்டல் பரிமாற்றம் மற்றும் நிலைத்தன்மைக்கு அதன் பல்வேறு விதமான அர்ப்பணம் என்பன பற்றிய விரிவான தகவல்களை இந்த உரை உள்ளடக்கியிருந்தது.

> **வங்கியின் கடல் கடந்த செயற்பாடுகளில் அது கண்டுள்ள அபிவிருத்தி, நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு வங்கியாக நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பை நல்கியது**

ICC கொமர்ஷல் வங்கியின் நீண்டகால பங்காளியாக இருப்பதையும் மனதுங்க நினைவூட்டினார். வித்தியாசமான சந்தைகள் பற்றிய அதன் அறிவு மற்றும் நிபுணத்துவம் என்பனவற்றை பகிர்ந்து கொள்ளல், பரஸ்பர நலன்களை பேணும் வர்த்தக ரீதியான உறவுகள் என்பனவற்றையும் அவர் குறிப்பிட்டுக் காட்டினார்.

ICC இன் இலங்கை கிளையின் நிர்வாக சபையில் கொமர்ஷல் வங்கிக்கு நிரந்தர ஆசனம் உள்ளமையை தாங்கள் பெருமையாகக் கருதுவதாகவும், வங்கியின் பயணத்தில் ICC ஒரு பங்காளியாக இருப்பதற்கு நன்றி கூறுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதிதாக விஸ்தரிப்பு செய்யப்பட்ட

# கண்டி சிறுவர் அபிவிருத்தி நிலையம் கையளிப்பு

கண்டி மாவட்டத்தின் கட்டுகெல்ல பிரதேசத்தின் பின்தங்கிய சிறுவர், இளைஞர்கள் மற்றும் பெண்களுக்காக புதிதாக விஸ்தரிப்பு செய்யப்பட்ட கண்டி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் கையளிப்பு நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி கலந்து கொண்டார். இந்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. ஜப்பானிய அரசாங்கத்தின் Grant Assistance for Grassroots Human Security Projects (GGP) திட்டத்தின் கீழ் இந்த விஸ்தரிப்பு பணிகளுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்தத் திட்டத்திற்காக ஜப்பானிய அரசாங்கத்தினால் மொத்தமாக 63,935 அமெரிக்க டொலர்கள் பங்களிப்பு செய்யப்பட்டிருந்தன. இரு மாடிகளை புதிதாக சேர்த்து, அதில் வகுப்பறைகள், மண்டபம், நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப அறை போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. பயிலல் சூழலை இந்த வசதி மேம்படுத்தும் என்பதுடன், சுமார் 350 சிறுவர்களையும், இளைஞர்களையும் உள்வாங்கக்கூடிய வகையில் விஸ்தரிக்கப்படும். அத்துடன், சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் 80 பின்தங்கிய பெண்களுக்கும் தொழிற்பயிற்சிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பை வழங்கும்.




இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்குவதற்கான அர்ப்பணிப்பை தூதுவர் மிசுகொஷி மீள உறுதி செய்திருந்ததுடன், மனித உரிமைகள் மற்றும் சிறுவர்கள், பெண்களின் கண்ணியத்தை காக்கும் செயற்பாடுகள், அவர்களின் உறுதித்தன்மை மற்றும் சுதந்தித்தை ஊக்குவிப்பது மற்றும் வறுமை சங்கிலியை இல்லாமல் செய்து, உள்ளடக்கமான சமூகத்தை ஏற்படுத்துவதில் தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக தெரிவித்தார்.

# சுகாதார மேலாண்மையில் நோயாளி பராமரிப்பு செயல்திறனை மேம்படுத்துகிறது HHIMS

கடந்த காலங்களில், நோயாளிகளின் தரவை நிர்வகித்தல், தகவல்களை ஒழுங்கமைத்தல் மற்றும் தரவைப் பாதுகாப்பாக வைத்திருப்பது போன்றவற்றில் சுகாதாரத் துறையில் பல சிக்கல்கள் இருந்தன. இந்த பிரச்சினைகளை சரிசெய்து இலங்கையில் சுகாதார சேவையை சிறந்ததாக்க 2012 இல் HHIMS திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது சுகாதார அமைச்சகம் மற்றும் ICTA ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டாண்மை ஆகும், மேலும் மருத்துவமனைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பாரம்பரியமாக, திறமையற்ற நோயாளி தரவு மேலாண்மை, துண்டு துண்டான தகவல், தரவு பாதுகாப்பு பாதிப்புகள் மற்றும் விரிவான மருத்துவ முடிவு ஆதரவு இல்லாமை போன்ற தடைகளை சுகாதாரத்துறை எதிர்கொண்டது. HHIMS இந்த சவால்களைத் தணிக்கவும் மற்றும் சுகாதார நிலப்பரப்பை மறுவடிவமைக்கவும் கருத்தாக்கப்பட்டது.

HHIMS என்பது வெளிநோயாளர் மற்றும் உள்நோயாளிகள் மேலாண்மை, கிளினிக் மேலாண்மை மற்றும் அறிக்கையிடல் போன்ற விஷயங்களுக்கு உதவும் ஒரு பெரிய அமைப்பாகும். நோயாளிகளுக்கு சிறந்த சிகிச்சை அளிப்பது, வைத்தியர்கள் முடிவுகளை எடுப்பதை எளிதாக்குவது மற்றும் பணத்தைச் சேமிப்பது ஆகியவை முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.





இப்போது, தேசிய வைத்தியசாலை, போதனா வைத்தியசாலைகள், மாகாண மற்றும் மாவட்ட பொது வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச வைத்தியசாலைகள் போன்ற முக்கிய நிறுவனங்கள் உட்பட 81 வைத்தியசாலைகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது..

HHIMS இன்றுவரை 9.5 மில்லியனுக்கும் அதிகமான நோயாளிகளைப் பதிவு செய்துள்ளது. மற்றும் கணினியில் சுமார் 23 மில்லியன் மின்னணு மருத்துவப் பதிவுகளைப் பராமரித்து வருகிறது. சுகாதார அமைச்சகம் மற்றும் ICTA ஆகியவை நாடு முழுவதும் உள்ள மற்ற மருத்துவமனைகளுக்கும் இந்த முறையை விரிவுபடுத்த தீவிரமாக ஒத்துழைத்து வருகின்றன. மேலும், எதிர்காலத்தில், ஒரு நோயாளியை ஒரு மருத்துவமனையிலிருந்து மற்றொரு மருத்துவமனைக்கு மாற்றும்போது, நோயாளியின் பராமரிப்பை மேலும் மேம்படுத்தி, சுகாதாரப் பாதுகாப்பு செயல்முறைகளை ஒழுங்குபடுத்தும் போது, தொடர்புடைய அனைத்து நோயாளி விவரங்களையும் தடையின்றி வழங்கும் கூடுதல் அம்சத்துடன் இந்த அமைப்பு மேலும் மேம்படுத்தப்படும்.




Global Innovation Challenge க்கு

# நிதியுதவி பெறும் அமைப்புகள் அறிவிப்பு

முதற்தடவையாக Global Innovation Challenge என்ற பெயரில் நடத்தப்படும் உலக புதுமைப் படைப்பு சவாலுக்காக நிதியுதவி பெறும் அமைப்புக்களின் விவரங்களை Citi Foundation அறிவித்துள்ளது. உலகம் முழுவதும் குறைந்த வருமானம் பெறும் சமூகங்கள் எதிர்கொள்ளக்கூடிய சமூக பொருளாதார சவால்களுக்கு புதுமையான தீர்வுகளை உருவாக்கும் சமுதாய ஸ்தாபனங்கள் இனங்காணப்பட்டு, அவற்றுக்கு கொடையுதவி செய்யும் முறைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில், Citi Foundation இன் நன்கொடையாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) 50,000 அமெ. டொலர் நிதியுதவியைப் பெற்றது. இதன்மூலம், தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தை அறிமுகப்படுத்தி, சகலதையும் உள்ளடக்கிய நிதி உற்பத்திகள் மற்றும் சேவைகளை பெறக்கூடிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையில் சிறிய அளவில் விவசாயம் செய்யும் பெண்களுக்கு உதவிகள் வழங்கப்படும். இந்த வேலைத்திட்டத்தில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் உற்பத்தித் திறனையும், சமுதாயத்தின் மீண்டெழும் திறனையும் விருத்தி செய்யக்கூடிய சுற்றாடல்-நேய விவசாய தொழில்நுட்பங்கள் போதிக்கப்படவுள்ளன.

UNDP Sri Lanka அடங்கலாக நிதியுதவி பெறும் ஐம்பது நிறுவனங்களும் முன்னுரிமை அளிக்கப்பட்ட நான்கு துறைகளில் நிகழ்ச்சித் திட்ட உதவிகளைப் பெறவுள்ளன. அவை யாவன: உணவை அணுகுதல், உணவு கிடைக்கக்கூடிய தன்மை, கட்டுப்படியான தன்மை, சமுதாயத்தின் மீண்டெழும் திறன். இந்தப் புதுமைப் படைப்புகளில் உணவுக்கான கேள்வியையும் விநியோகத்தையும் நிவர்த்திக்கும் செயலிகளை ஆரம்பித்தல் முதற்கொண்டு புதிய தொழில்நுட்பத்தையும் நகர்ப்புற தோட்டங்களை அமைப்பதற்காக நிலைபேற்றுத்தன்மை வாய்ந்த விவசாய நடைமுறைகளையும் முன்னோடியாக அறிமுகப்படுத்தல் வரையில் பல விடயங்களும் அடங்கும்.

நன்கொடை பெற்ற நிறுவனங்கள் இரு வருட காலத்தில் இலாப நோக்கம் அற்று செயற்படும் IDEO.org என்ற இணையவெளி வடிவமைப்பு நிறுவனம் வழங்கும் வசதிகள் ஊடாக ஒரு கற்றல் சமுதாயத்தை அணுகவுள்ளன. இந்த நிறுவனங்கள் ஒரு டிஜிற்றல் தளத்தின் ஊடாகவும், திரட்டப்பட்ட அனுபவங்கள் வாயிலாகவும், ஒருங்கமைவை ஏற்படுத்தி, கற்ற பாடங்களைப் பகிர்ந்து கொண்டு, சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பைப் பெறவுள்ளன.

இது பற்றி Citi Foundation இன் இலங்கை உத்தியோகத்தர் ரவீன் பஸ்நாயக்க கருத்து வெளியிடுகையில்: 'எமது வாடிக்கையாளர்களினதும், நாமும் ஒரு பாகமாக பிணைந்துள்ள சமுதாயத்தினதும் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி நோக்கி நகர்வது Citi ஐச் சேர்ந்த எமது இலக்கு. நான்கு தசாப்தங்களுக்கு முன்னதாக நாம் இலங்கையில் கால்பதித்த நாள் தொடக்கம் இந்த விடயம் முன்னுரிமை பெற்றிருந்தது'. அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், 'இலங்கையின் உணவுப் பாதுகாப்பு பற்றிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக விவசாய நடைமுறைகளை நவீனமயப்படுத்தி, நிலைபேறான நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையில் இன் நன்கொடை மூலதனத்தைப் பயன்படுத்த வாய்ப்பு கிடைத்திருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம்,' என்று கூறினார்.

UNDP Sri Lanka இற்குக் கிடைத்த உதவிகள் பற்றி அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அஸூசா குபோட்டா கருத் வெளியிடுகையில், 'இலங்கையின் சமூக-பொருளாதார நெருக்கடியில் விவசாயத்துறை பெரும் சுமையை எதிர்கொண்டுள்ளது. இத்தகைய பின்புலத்தில், இந்தத் திட்டமானது, வாழ்வாதாரங்களை பன்முகப்படுத்தியும், தொழில் முயற்சியாண்மை நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியும் குறிப்பாக, பெண் தலைமைத்துவ சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை இலக்கு வைத்து துரிதமாக மீட்சி பெறுவதற்குரிய உதவிகளை வழங்குகிறது. பிராந்திய ரீதியிலும், உள்நாட்டு மட்டத்திலும் UNDP இன் நீண்டகால பங்குதாரராக Citi திகழ்கிறது. நண்பாக மற்றும் வீடுகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களையும், பெண்களின் வாழ்வாதாரத்தையும் வலுப்படுத்துவதன் ஊடாக, உணவுப் பாதுகாப்பை நோக்கிய திசையில் நாடு நகர்த்தப்படுவதை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கமும், ஏனைய அபிவிருத்தி பங்காளர்களும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உதவி செய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.' என்றார்.

# SLT-MOBITEL mSpace Code Blast Hackathon 2023 முன்னெடுப்பு

புத்தாக்கமான தொழில்நுட்பத்தை வெளிப்படுத்தியிருந்த coding ஆர்வலர்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் நிறைந்த புத்தாக்கவியலாளர்களை ஒன்றிணைத்து, SLT-MOBITEL mSpace Code Blast Hackathon 2023 நிகழ்வு வெற்றிகரமாக நிறைவடைந்திருந்தது.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL மற்றும் hSenid Mobile ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த Hackathon ஊடாக, coders மற்றும் non-coders க்கு கைகோர்த்து, புத்தாக்கமான செயற்பாடுகளில் ஈடுபட்டு, தொழில்நுட்ப ரீதியான தீர்வுகளை வடிவமைப்பதற்கு வாய்ப்புக் கிடைத்திருந்தது.

mSpace Code Blast Hackathon 2023 இல் பங்கேற்றிருந்தவர்கள் மத்தியில் கடும் போட்டி நிலவியிருந்ததுடன், மூன்று அணியினர் முன்னிலையாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இன்றைய காலகட்டத்தில் பிரயாணிகள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சனைக்கு தீர்வை வழங்கியிருந்த Team Denkers வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.


இரண்டாமிடத்தை மொழி பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலான தீர்வை வடிவமைத்திருந்த Team SinhalaGPT பெற்றுக் கொண்டது. இந்தப் புத்தாக்கமான தீர்வினூடாக மொழி இடைவெளியை நிவர்த்தி செய்து, குடிமக்களுக்கு மேம்படுத்திய அணுகலை பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்திருந்தது.


மூன்றாமிடத்தை தமது புரட்சிகரமான app வெளியிட்டிருந்த Team Fine Pay தெரிவு செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் தண்டப் பணத்தை செலுத்தும் முறைமையை எளிமைப்படுத்துவதற்கு நீண்ட காலமாக நிலவிய தேவையை நிவர்த்தி செய்வதாக இந்த தீர்வு அமைந்திருந்தது.

புத்தாக்கத்துக்கும் தொழில்நுட்பமுயற்சியாண்மைக்கும் ஆக்கத்திறன், பிரச்சனையை தீர்த்தல் மற்றும் கைகோர்ப்பு ஆகியவற்றை ஒன்றிணைத்து வாய்ப்பளிப்பதாக Hackathon அமைந்திருந்தது. பிரயோக ரீதியான அனுபவத்தையும், பெறுமதி வாய்ந்த இணைப்புகளையும் தொழில்நுட்பத்துறையில் வழங்குவதாக அமைந்திருந்தது.

பல்வேறு பின்புலன்களைச் சேர்ந்தவர்களுக்கு பரந்த கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக SLT-MOBITEL mSpace அமைந்துள்ளது.



ரெய்காவிக்



எரிமலை வெடிப்பு அச்சுறுத்தல்

# ஐஸ்லாந்தில் அவசர நிலை

தொடர்ச்சியான நில அதிர்வுகளின் விளைவாக எரிமலை வெடிப்பு அச்சுறுத்தல் அதிகரித்ததன் காரணமாக, ஐஸ்லாந்து நாட்டில் அவசர நிலை பிரகடப்படுத்தப்பட்டுள்ளது.

ஐஸ்லாந்து நாட்டில், கடந்த 24 மணி நேரத்தில் 1400 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டிருப்பதால் அங்கு எரிமலை வெடிப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டு, அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதனால், அந்நாட்டில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் அச்சத்தில் உள்ளனர். வடக்கு கிரண்டாவிக் (Grindavik) பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.2 ஆக பதிவாகியுள்ளது. இதனால், கிரிண்டாவிக் அருகே உள்ள பிரபல சுற்றுலா தலமான ப்ளூ லகூன் மூடப்பட்டுள்ளது.

இந்த தொடர் நிலநடுக்கங்கள் காரணமாக மிகப் பெரிய எரிமலை வெடிப்பு ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. இதையடுத்து, அவசர நிலையை ஐஸ்லாந்து அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர்.

ஐஸ்லாந்தில் 33 எரிமலைகள் உள்ளதாக கூறப்படுகிறது. கடந்த ஒக்டோபர் மாதத்தில் இருந்து ஐஸ்லாந்தில் இதுவரை சுமார் 24,000-க்கும் மேற்பட்ட நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கடந்த ஏப்ரல் 2010-இல் ஐஸ்லாந்தின் தெற்குப் பகுதியில் ஏற்பட்ட மிகப் பெரிய எரிமலை வெடிப்பு காரணமாக உலகம் முழுவதும் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டதும், இதையடுத்து ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் தவித்ததும் நினைவுகூரத்தக்கது.

பெங்கொக்

## ஜெனரலுக்கு 5 ஆண்டு சிறை

ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய மியான்மர் நாட்டின் முன்னாள் இராணுவ ஜெனரலுக்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மியான்மரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் தலைவராக இருந்த ஆங் சாங் சூகி கடந்த 2021ம் ஆண்டு பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. அதன் பிறகு இராணுவம் தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. மியான்மர் நாட்டின் ஆளும் நிர்வாக கவுன்சிலின் உறுப்பினராகவும் அந்நாட்டின் உள்துறை அமைச்சராகவும் பதவி வகித்தவர் லெப்.ஜெனரல் சோ ஹட்டுட்.

ஜனநாயகத்துக்கு ஆதரவான போராட்டங்களை ஒடுக்கியதில் இவர் முக்கிய பங்கு வகித்துள்ளார். இவர் பதவியில் இருந்த போது, தனக்கு நெருக்கமான கம்பெனியில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு கடவுச்சீட்டு வழங்க பரிந்துரை செய்துள்ளார். அதே போல் இலஞ்சம் வாங்கியதாகவும் ,உள்துறை அமைச்சகத்தின் ஊழியர் நல நிதியில் மோசடி செய்ததாக சோ ஹட்டுட் மீது குற்றம் சாட்டப்பட்டது.




மாஸ்கோ

## காதலியை கொன்றவரை உக்ரேனுக்கு அனுப்பிய புட்டின்

காதலியை பலாத்காரம் செய்து விட்டு, 111 முறை கத்தியால் குத்தி கொடூரமாக கொன்ற காதலனுக்கு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் மன்னிப்பு வழங்கி போர் முனைக்கு அனுப்பி வைத்து இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

ரஷ்யா தலைநகர் மாஸ்கோவை சேர்ந்தவர் விளாடிஸ்லாவ் கன்யூஸ். இவர் தனது முன்னாள் காதலியான வேரா பெக்டெலேவாவை பலாத்காரம் மற்றும் சித்ரவதை செய்து 111 முறை கத்தியால் குத்தினார்.

மூன்றரை மணி நேரம் அவர் இந்த சித்ரவதையை தனது முன்னாள் காதலி வேராவுக்கு செய்துள்ளார். பின்னர் அவர் காதலி கழுத்தை ஒரு கேபிள் கம்பி மூலம் நெரித்துக்கொன்றார். அவரது அலறல் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள் 7 முறை பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பு செய்தும் எந்த பதிலும் இல்லை. அதன்பின் வந்த பொலிஸார் விளாடிஸ்லாவ் கன்யூசை கைது செய்தனர்.





சிலிகுரி

## நாய்களை அலங்கரித்து தீபாவளி வழிபாடு

விலங்குகளில், மனிதர்களின் சிறந்த நண்பர்களாக நாய்கள் உள்ளன. அவற்றிற்காக ஒரு குறிப்பிட்ட பகுதியை சேர்ந்த மக்கள் பூஜைகள், கொண்டாட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபடுவது ஆச்சரியம் ஏற்படுத்துகிறது.

மேற்கு வங்காளத்தில் சிலிகுரி நகரிலேயே இந்த விநோத திருவிழா நடத்தப்படுகிறது. இதன்படி, குகுர் திகார் அல்லது குகுர் பூஜை என்ற பெயரில் கொண்டாட்டங்கள் நடந்தன. இதில், அந்த பகுதியை சேர்ந்த மக்கள் வளர்ப்பு நாய்கள் என்றில்லாமல் தெரு நாய்களையும் காலையிலேயே குளிக்க வைத்து, அவற்றை அலங்கரித்து, சிறப்பாக சமைக்கப்பட்ட நிறைய உணவுகளையும் வழங்கினர். தீபாவளி பண்டிகையையொட்டி இந்த திருவிழா விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இதுபற்றி விலங்குகளுக்கான உதவி மையத்தின் உறுப்பினரான பிரியா ராய் கூறும்போது, அதிக உற்சாகத்துடன் குகுர் திகார் பண்டிகை கொண்டாடப்பட்டது.



அயோத்தி

## அயோத்தி தீபோற்சவம்: கின்னஸ் சாதனை படைத்தது



உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தி நகரில் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் 22 இலட்சத்துக்கும் மேற்பட்ட விளக்குகள் தீபோற்சவ நிகழ்வை முன்னிட்டு ஒளிர்விக்கப்பட்டது. இது கின்னஸ் உலக சாதனையாகவும் அமைந்துள்ளது.

14 ஆண்டுகால வனவாசத்தை முடித்துக் கொண்டு ராமர், சீதை மற்றும் லட்சுமணன் அயோத்தி திரும்பியதாக சொல்லப்படும் வழக்கத்தின் காரணமாக அயோத்தியில் தீபோற்சவ விழா நடைபெறுகிறது. இந்த ஆண்டு வழக்கம் போலவே தீபோற்சவம் நடைபெற்றது. கடந்த ஆண்டு நடைபெற்ற அயோத்தி தீபோற்சவ விழாவில் 15 இலட்சம் விளக்குகள் ஏற்றப்பட்டன. இது கின்னஸ் சாதனையாக அமைந்தது. நடப்பு ஆண்டுக்கான தீபோற்சவ விழா அதை தகர்த்துள்ளது.





சம்பியன்ஸ் கிண்ணத்துக்கு

# இங்கிலாந்து தகுதி

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியில் வெற்றமையைத் தொடர்ந்தே சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

உலகக் கிண்ண புள்ளிகள் பட்டியலில் ஆறு புள்ளிகளுடன் ஏழாமிடத்திலுள்ள நிலையில், இந்தியாவை நெதர்லாந்து எதிர்பாரதளவு வித்தியாசத்தில் வென்றாலும் இங்கிலாந்து எட்டாமிடத்துக்கே கீழிறங்கும் என்பதால், பாகிஸ்தானோடு சேர்த்து முதல் ஏழு அணிகளும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறும் என்ற நிலையில், பாகிஸ்தான் ஐந்தாமிடத்திலுள்ள நிலையிலும் இங்கிலாந்து சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 337/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: பென் ஸ்டோக்ஸ் 84 (76), ஜோ றூட் 60 (72), ஜொனி பெயார்ஸ்டோ 59 (61), டேவிட் மலன் 31 (39), ஹரி ப்றூக் 30 (17), டேவிட் வில்லி ஆ.இ 15 (05) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹரிஸ் றாஃப் 3/64, இஃப்திஹார் அஹ்மட் 1/38)

பாகிஸ்தான்: 244/10 (43.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: அக்ஹா சல்மான் 51 (45), பாபர் அஸாம் 38 (45), மொஹமட் றிஸ்வான் 36 (51), ஹரிஸ் றாஃப் 35 (23), செளட் செளகீல் 29 (37), ஷகீன் ஷா அஃப்ரிடி 25 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: டேவிட் வில்லி 3/56, அடில் ரஷீட் 2/55, குஸ் அட்கின்ஸன் 2/45, மொயின் அலி 2/60, கிறிஸ் வோக்ஸ் 1/27)

போட்டியின் நாயகன்: டேவிட் வில்லி

இதேவேளை, பூனேயில் நடைபெற்ற மற்றைய போட்டியில் பங்களாதேஷை அவுஸ்திரேலியா வென்றிருந்தது.

அந்தவகையில் இப்போட்டியில் தோற்றாலும் இலங்கையின் ஓட்ட விகிதத்தை பங்களாதேஷின் ஓட்ட விகிதம் குறைவடையாத நிலையில், புள்ளிகள் பட்டியலில் ஒன்பதாமிடத்திலுள்ள இலங்கை, சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறத் தவறியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் தொடருக்கான

## இங்கிலாந்துக் குழாமில் போப், குறோலி



மேற்கிந்தியத் தீவுகள் தொடருக்கான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான குழாமில் துடுப்பாட்டவீரர் ஒலி போப், பந்துவீச்சாளர்கள் ஜோன் டேர்னர், ஜொஷ் டொங்க் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் இக்குழாமில் இடம்பெறுவது இதுவே முதற் தடவையாகும்.

இந்நிலையில் இக்குழாமில் ஸக் குறோலி, பென் டக்கெட், றெஹான் அஹ்மட், டொம் ஹாட்லி, வில் ஜக்ஸ், பில் ஸோல்ட் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை உலகக் கிண்ணத் தொடருக்கான குழாமில் இடம்பெற்ற டேவிட் மலன், இக்குழாமில் இடம்பெறவில்லை. ஜொனி பெயார்ஸ்டோ, ஜோ றூட், மார்க் வூட் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மொயின் அலி, அடில் ரஷீட், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான குழாமில் இடம்பெறாத நிலையில், இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

பாலமுனை பிரதேச கால்பந்தாட்ட வீரர்களுக்கு

## காலணி வழங்கி வைப்பு

அஸ்ஹர் இப்றாஹிம்

பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்ட வீரர்களை ஊக்கப்படுத்தும் முகமாக கழகத் தலைவர் எஸ்.எல். எம். ஆஷிக் தலைமையில் முன்னாள் தலைவர் ஐ.எல். எம்.பாயிஸின் இல்லத்தில் காலணி வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

அத்துடன், அம்பாறை மாவட்ட இளைஞர் கழக விளையாட்டுப் போட்டியில் சம்பியன்களாக பிரகாசித்த பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டுக்கழக வீரர்களும் கெளரவிக்கப்பட்டனர்.

அந்த வகையில் இடம்பெற்ற மாவட்ட மட்ட இளைஞர் கழக மெய்வல்லுனர் போட்டிகளில் மூன்று போட்டிகளிலும் கலந்து கொண்டு






நெஸ்லே நெஸ்டமோல்ட் மரதனோட்டம்:

## பெரமுனே வென்றார்

நெஸ்லே நெஸ்டமோல்ட் அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான 21 கிலோ மீற்றர் அரை மரதனோட்டப் போட்டியில் இரத்தினபுரி வித்யராஜ வித்தியாலயத்தைச் சேர்ந்த டி.ஏ.டி. ஜி பெரமுன, போட்டித் தூரத்தை ஒரு மணித்தியாலம் 16 நிமிடங்கள் 22 செக்கன்களில் கடந்து வென்றார்.

இரண்டாமிடத்தை கிளிநொச்சி முழங்காவின் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். கீரன், ஒரு மணித்தியாலம் 17 நிமிடங்கள் 22 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்து பெற்றதுடன், மூன்றாமிடத்தை ஊவா உக்பிட்டிய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஈ.ஜி. லசித பிரதீப் பெற்றார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## வொல்வ்.ஃ.ஸிடம் தோற்ற டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொஸ்பர் தோற்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 13 நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.